தமிழ் மின்மரபுடைமைத் திட்டம்

ஆதரவு:
இந்திய சமூகம்

National Library Board Singapore
National Heritage Board
NATIONAL ARTS COUNCIL SINGAPORE
NBDCS The Book Council

Tamil Digital Heritage
தமிழ் மின்மரபுடைமைத் திட்டம்

தமிழ்மொழிக் கல்விக்கு வலுவூட்டும் இலக்கிய மின்தொகுப்பின் பயன்பாடு

தேதி: 26 செப்டம்பர் 2015 (சனிக்கிழமை)
நேரம்: மாலை 5.00 மணி
இடம்: தேசிய நூலக வாரியம்

நோக்கம்

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய மின்வளங்களைத் தமிழ்மொழிப் பாடத்தோடு **ஒருங்கிணைத்துக் கற்பித்தல்**

Tamil Digital Heritage Coll

EN English (Singapore) Help

eresources.nlb.gov.sg/printheritage/browse/Tamil_Digital_Heritage_Collection.aspx

BookSG

A digital collection of Singapore and Southeast Asia's print heritage

Singapore Government
Integrity · Service · Excellence

Contact Info | Feedback | FAQs

Home / Tamil Digital Heritage Collection

Enter text to search

All Digitised books Illustrations

தமிழ் மின்மரபுடைமைத் திட்டம்

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் – மின்தொகுப்பு (1965 - 2015)
Singapore Tamil Literature – Digital Collection (1965 - 2015)

தமிழ் மின் இலக்கியத் தொகுப்பு

சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்த 1965ஆம் ஆண்டுக்கும் அதன் 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் 2015ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பதிப்பிக்கப்பட்ட சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய நூல்களின் மின்வடிவம்தான் இந்தப் பகுதியில் நீங்கள் காணும் தமிழ் மின்னிலக்கியத் தொகுப்பு. இத்தொகுப்பில் கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், இலக்கியக் கட்டுரைகள் போன்றவை அடங்கியுள்ளன. அவை அனைத்துமே சிங்கப்பூரர்கள் அல்லது சிங்கப்பூர் நிரந்தரவாசிகளால் எழுதப்பட்டவை அல்லது சிங்கப்பூரைப் பற்றியவை. இதுபோன்ற ஒரு மின்தொகுப்பைத் தேசிய நூலக வாரியம் தமிழில் வெளியிடுவது இதுவே முதல் முறை. சிங்கப்பூரர்கள் அடங்கிய ஒரு சிறு குழு, இந்தத் திட்டத்தை முன்வைத்ததோடு அதற்குத் தேவையான சமூக ஆதரவையும் வளங்களையும் ஒன்றுதிரட்டிச் செயல்வடிவமும் கொடுத்தது. 22 ஆகஸ்ட் 2015 அன்று, சிறப்பு விருந்தினர், துணைப் பிரதமரும் நிதியமைச்சருமான திரு தர்மன் சண்முகரத்னம், பிரதமர் அலுவலக அமைச்சரும், உள்துறை, வர்த்தக தொழில் அமைச்சுகளுக்கான இரண்டாம் அமைச்சரும், திட்டத்தின் புரவலருமான திரு எஸ் ஈஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் இந்தத் தமிழ் மின்னிலக்கியத் தொகுப்பு இந்த நாட்டிற்குச் சிங்கப்பூர் இந்திய சமூகத்தின் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை நிர்வகிக்கும் தேசிய நூலக வாரியத்தோடு தேசிய மரபுடைமைக் கழகம், தேசிய கலைகள் மன்றம், சிங்கப்பூர்ப் புத்தக வளர்ச்சி மன்றம் ஆகிய அமைப்புகளும் ஒன்றிணைந்து ஆதரவு வழங்கியுள்ளன. இந்தத் திட்டத்தை உருவாக்க உதவிய அனைவரின் பெயர்களும் நன்றிநவிலும் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன.

2:18 PM
20/9/2015

http://eresources.nlb.gov.sg/printheritage/browse/Tamil_Digital_Heritage_Collection.aspx

இலக்கிய மின்வளங்கள்: வகைப்பாடு

சிறுவர் இலக்கியம் (கதை, பாடல், நாடகம்)
சிறுகதை (தொகுப்பு)
புதினம்
கவிதை (தொகுப்பு)
நாடகம்
இலக்கியக் கட்டுரை

இலக்கிய மின்வளத்தின் முக்கியத்துவம்

வளமை: வரப்பிரசாதம்

மொழியையும் இலக்கியத்தையும் ஒருங்கிணைத்துக் கற்பிப்பதால் கிடைக்கப்பெறும் நன்மைகள் என்ன?

இலக்கிய மின்வளத்தின் முக்கியத்துவம்

வாய்ப்பு > விழிப்புணர்வு

வாசிப்பு ↑

திறன் வளர்ச்சி ↑

படைப்பிலக்கியங்கள் ↑

பாட யோசனை: தொடக்கநிலை 5B (தமிழ்)

தொகுதி 8: சமூகமும் நாடும் (நாட்டுப்பற்று) பக்கம்: 13

மொழித்திறன்: பேசுதலும் படித்தலும்

கற்பித்தல் நோக்கம் (பேசுதல்):

மாணவர்கள் கவிதையைப் பொருள் உணர்ந்து படித்துக் குழுநிலையில் நாட்டுப்பற்றுப் பற்றிப் பேசுவர்.

கற்பித்தல் நோக்கம் (படித்தல்):

‘தேசிய சேவை’ என்னும் வாசிப்புப் பகுதியைக் குரல் ஏற்ற இறக்கத்துடனும் சரியான தொனியுடனும் உச்சரிப்புத் தெளிவுடனும் வாசிப்பர்.

தொகுதி 8

தேசிய சேவை

வாசிப்போம்

பாடம் 3

தேசிய சேவை

என் அண்ணன் பாலன் தேசிய சேவையில் சேர்ந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. அவரது அடிப்படை இராணுவப் பயிற்சி முடிந்ததையொட்டி அணிவகுப்பு நடைபெற்றது. அதைக் காண நானும் என் பெற்றோருடன் சென்றிருந்தேன்.

"அம்மா! அண்ணன் மிடுக்குடன் அணிவகுத்துச் செல்வதைப் பாருங்கள்," என்று நான் அண்ணனைச் சுட்டிக்காட்டிக் கூறினேன். "ஆமாம் ரேவதி. முன்பெல்லாம் சோம்பல்படும் உன் அண்ணன் இப்போது இவ்வளவு சுறுசுறுப்புடன் அணிவகுத்துச் செல்வதைப் பார்ப்பது எனக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது," என்று அம்மாவும் பூரிப்போடு கூறினார்.

வீடு திரும்பியதும் நானும் என் அண்ணனும் அணிவகுப்பின்போது எடுத்த புகைப்படங்களைப் பார்த்துக்கொண்டிருந்தோம். அப்போது அண்ணன், "நான் தேசிய சேவைக்குச் சென்ற பிறகு ஒரு நாட்டுக்குப் பாதுகாப்பு எவ்வளவு முக்கியம் என்பதை நன்றாகப் புரிந்துகொண்டேன். அதுமட்டுமா? நாட்டின் பாதுகாப்பில் எனக்கும் பங்கு இருக்கிறது என்பதையும் அறிந்துகொண்டேன். மேலும், இளையர்களாகிய நாம் நம் நாட்டைக் காக்கத் தயாராக இருக்க வேண்டியது அவசியம் என்பதையும் உணர்ந்துகொண்டேன். மொத்தத்தில் இது எனக்கு ஒரு மறக்க முடியாத அனுபவமாகும்," என்றார்.

"உன்னைப் போன்ற நல்ல குடிமகனைத் தேசிய சேவை உருவாக்குகிறது," என்று அங்கே வந்த என் அம்மா சொன்னார்.

கவிஞர் ந பழநிவேலு



முன்னறிவை ஊட்டுதல்

சிங்கப்பூர்

தென்கிழக் காசிய நாடுகளில்
சின்னஞ் சிறிய சிங்கப்பூர்
வண்ண ஒளியை வீசுகின்ற
வைரப் பதக்கம் எனலாமே!

அடுக்கு மாடி வீடுகளும்
அழகிய மலர்சூழ் வீதிகளும்
துடிப்போ டுள்ள இளையர்களும்
சூழும் கடலில் கப்பல்களும்

பகலிர வறியா நகரிதுவே
பண்டங்கள் விற்கும் அழகிங்கே
சகல இனங்களின் சகவாழ்வு
தழைக்கும் சிங்கை நாட்டினிலே

சுதந்திரச் சிங்கை நாட்டவர்நாம்
சுதந்திரம் காக்கப் படவேண்டும்
இதந்தரும் நற்பணி களிலொன்று
இளையர்கள் படையில் சேருதலாம்

மலையசைந் தாலும் நிலைகுலையா
மக்கட் செல்வம் பெற்றுள்ளோம்
இலைமக் கீடே எனும்படிநாம்
என்றும் உழைத்துமுன் னேறிடுவோம்.

(1967)

சிங்கப்பூர்

தென்கிழக்கு ஆசிய நாடுகளில்
சின்னஞ் சிறிய சிங்கப்பூர்
வண்ண ஒளியை வீசுகின்ற
வைரப் பதக்கம் எனலாமே!

அடுக்கு மாடி வீடுகளும்
அழகிய மலர்சூழ் வீதிகளும்
துடிப்போடு உள்ள
இளையர்களும்
சூழும் கடலில் கப்பல்களும்

பகல் இரவு அறியா நகரிதுவே
பண்டங்கள் விற்கும் அழகிங்கே
சகல இனங்களின் சகவாழ்வு
தழைக்கும் சிங்கை நாட்டினிலே

பாடலை எளிமையாக்குதல்

சுதந்திரச் சிங்கை நாட்டவர்நாம்
சுதந்திரம் காக்கப்பட வேண்டும்
இதம்தரும் நற்பணிகளில் ஒன்று
இளையர்கள் படையில்
சேருதலாம்

மலை அசைந்தாலும்
நிலைகுலையா
மக்கள் செல்வம் பெற்றுள்ளோம்
இல்லை எமக்கு ஈடு என்னும்படி
நாம்
என்றும் உழைத்து
முன்னேறிடுவோம்
(1967)

சொற்பட்டியல்

சொல்	பொருள்
மலர்சூழ்	மலர் நிறைந்த
சூழும்	சூழ்ந்திருக்கும்
சகவாழ்வு	சமத்துவமான வாழ்க்கை
தழைக்கும்	செழிக்கும்
இதம் தரும்	சுகம் தரும்
எமக்கு	நமக்கு
ஈடு	இணை (சமம்)

பாலனுடைய தாயார் கூறும் கருத்து (வாசிப்பு):

“உன்னைப் போன்ற நல்ல குடிமகனைத் தேசிய சேவை உருவாக்குகிறது,” என்று அங்கே வந்த அம்மா சொன்னார்.

கவிஞர் ந பழநிவேலுவின் கருத்து (கவிதை):

... இதம் தரும் நற்பணிகளில் ஒன்று
இளையர்கள் படையில் சேருதலாம்...

பேசுதல் நடவடிக்கை

மேற்குறிப்பிட்ட கருத்துகளை ஒப்பிட்டு உன் கருத்துகளைக் கலந்துரையாடி வகுப்பில் கூறு.

பாட யோசனை: உயர்நிலை 2 (உயர்தமிழ்)

மொழித்திறன்: எழுதுதலும் படித்தலும்

கற்பித்தல் நோக்கம்:

மாணவர்கள் சிறுகதையில் பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறு தொடக்கங்களைக் கருத்திற்கொண்டு ஆர்வமூட்டும் முன்னுரையை நிகழ்வுக் கட்டுரையின்போது உருவாக்கி எழுதுவர்.

பயிற்சி 1.6 தேதி: _____

எழுத்தும் நடையும்

பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துச் சிற்றுரை எழுது.

1. நான் பெற்ற புது அனுபவம்
2. நட்புக் கற்றுத் தந்த பாடம்
3. என் மனப்போக்கை மாற்றியமைத்த சம்பவம்

பயிற்சிநூல் 2B
(உயர்தமிழ்)
பாடத் தொகுதி: 1
எழுதுதல் (பக்கம் 12)

கதாபாத்திரத்தைக் கதை / சம்பவத்தின் தொடக்கத்தில் அறிமுகம் செய்தல்

உறவுகள்

சுந்தரத்தின் சுறுசுறுப்புச் **சுலோச்சனா**வுக்குச் சங்கடத்தைக் கொடுத்தது. நாலாயிரம் கிலோ மீட்டர் பயணமா? இல்லை நான்கு கிலோமீட்டர்தான். அங்குப் போவதென்றால் அவர் உணர்வில் ஓர் எழுச்சி; அவரது உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி....

- பின்னோக்கு நினைவலை உத்தி
- கதாசிரியர் நோக்குநிலையில் கதை / சம்பவம் சொல்லுதல்

வரம்பு

அப்போது **எனக்கு** வயது பத்திருக்கும்.
நான் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்தேன். “முத்தழகி, முத்தழகி,” என்று அழைத்தவர் வேறு யாரிமில்லை; **என்** தாய்தான். **எனக்கு** என் தாய் அழைத்தது எரிச்சலாக இருந்தது...

தமிழ்மொழிக் கல்விக்கு உரமூட்ட...

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய மின்வளங்களைப் பயன்படுத்திக் கற்பிப்பதற்கான

சாத்தியங்கள்

Ministry of Education
SINGAPORE

தமிழாசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாட்டகம், கல்வி அமைச்சு

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய மின்வளங்களைத் தமிழ்மொழிப் பாடத்தோடு ஒருங்கிணைத்துக் கற்பிப்பதற்கான வழிமுறைகள்

தொடக்கப்பள்ளித் தமிழாசிரியர்களுக்கான பயிலரங்கு (தவணை 2: 2016)

உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்களுக்கான பயிலரங்கு (தவணை 2: 2016)

நன்றி